[4th August 1966

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : (அ) & (இ) மூன்றும் ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் பஞ்சாயத்து ஒன்றிப்பு ஆசிரியைகளுக்கு வீடுகள் கட்டப்படுகின்றன. இப்பொழுது அவசர நிலைமையினால் பஞ்சாயத்து ஒன்றிப்பு ஆசிரியர்களுக்கு வீடுகள் கட்டும் திட்டம் இல்லை.

திரு. சோ. ஆறுமுகம் : ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனிலும் ஒன்றிரண்டு ஆசிரியர்களுக்கான விடுதிகள் தற்சமயம் கட்டப்பட்டு வருகின்றன. ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனிலும் பத்து பதினைந்து ஆசிரியர்கள் விடுதிகளாவது கட்டுவதற்கு சர்க்கார் உத்தரவிடுமா ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : பெண் ஆசிரியர்களுக்கு வீடு கட்டும் திட்டத்தைப்பற்றித்தான் குறிப்பிட்டேன். நான்காவது திட்டத்தில் ஒரு ப்ளாக்கிற்கு, திருப்தியான அளவிற்கு, சற்றேறக் குறைய பத்து வீடு அளவில் கட்டி முடிக்கக் கூடிய திட்டம் இருக்கிறது. அந்த அளவில்தான் 1966--67-ல் கிட்டத்தட்ட 75 க்வார்ட்டர்ஸ் கட்ட நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்பதைக் கனம் அங்கத்தினர்கள் அறிவார்கள்.

பெரியகோட்டை—மடப்புரம் சாலை

* 98 கேள்வி.—திரு. கரு. சீமைச்சாமி : கனம் தல நிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம், சிவகெங்கை தாலுகாவில் பெரியகோட்டையிலிருந்து, மடப்புரம் வரை சாலை அமைப்பது எந்நிலையில் உள்ளது ?

(இ) அதன் விபரம் என்ன ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : (அ) அவ்வாறான செயற்குறிப்பு ஏதுமில்லை

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

Municipal Central bus stand at Tiruchirappalli

* 99 *Q.*—Sri M. KALYANASUNDARAM, Sri V. SANKARAN } Will the Hon. the Minister for Local Administration be pleased to state with reference to the answer given to question No. 481 on 31st March 1964—

(*a*) the present stage of the proposal to construct a Municipal Central bus stand at Tiruchirappalli; and

(*b*) when the proposal will be finalised ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : (அ) & (இ) திருச்சியில் மத்திய பேருந்து நிலையம் அமைக்க தேர்ந்தெடுக்கப்பட்ட ரெயில்வே நிலத்தின் மதிப்பு நிர்ணயிப்பது பற்றி மாவட்ட கலெக்டருக்கும், தென் பிராந்திய ரெயில்வே பொது மேலாளருக்கும் கடிதப் போக்குவரத்து நடந்து வருகிறது.